# INDIAN SCHOOL SALALAH

## ACADEMIC YEAR 2026 – 2027

| | |
|---|---|
| Roll No: | Assessment Type: **FIRST TERM EXAMINATION SEPTEMBER - 2026** |
| Grade: **VIII** | Marks Obtained: ____ / **80** |
| Subject: TAMIL [SL] - **006** | |
| Date of Assessment: **15/09/2026** | Time: **3 Hours** |

***General Instructions:***

- This question paper contains **14** questions in **7** pages.
- Marks are indicated against each question.
- The question paper contains FIVE sections.
- Section A - Contains 2 questions.
- Section B - Contains 4 questions.
- Section C - Contains 4 questions.
- Section D - Contains 1 question.
- Section E - Contains 3 questions.
- Attempt as per specific instructions for each question.
- Write down the serial number of the question in the answer booklet before attempting it.

## SECTION - A

## பகுதி - அ (படித்தல் திறன் 10 மதிப்பெண்கள்)

**1. பின்வரும் பத்தியைப் படித்து அதையடுத்து வரும் பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5 x 1= 5**

1913ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் நாள் அம்பேத்கர் அமெரிக்கா சென்றார். உயர்கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம் மற்றும் சமூகவியல் ஆகிய பாடங்களைப் படித்தார். அங்கு அவர் 1915 -ல் 'பண்டைய இந்தியாவின் வாணிகம்' என்ற ஆய்வுக்கு முதுகலைப் பட்டம் பெற்றார். இந்தியாவின் சாதிகள் என்ற தலைப்பில் கருத்தாழமிக்க ஒரு கட்டுரையை எழுதினார். பின்னர், 'இந்திய தேசியப்பங்கு விகிதம் ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வு' என்ற தலைப்பில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஆய்வுக்கட்டுரை வெளியிட்டார். இந்த ஆய்வுக்கு கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.

**வினாக்கள்:**

i) எந்த ஆண்டில் அம்பேத்கர் அமெரிக்கா சென்றார்?

அ)1932 ஆ)1921 இ) 1913 ஈ)1941

ii) அம்பேத்கர் எந்த பல்கலைக்கழகத்தில் பயின்றார்?

அ) கொலம்பியா ஆ) ஆக்ஸ்போர்டு இ) ஹார்வர்டு ஈ) கேம்ப்ரிட்ஜ்

iii) எந்த ஆய்வுக்கு அம்பேத்கர் முதுகலைப் பட்டம் பெற்றார்?

அ) இந்திய விடுதலையின் தேவை ஆ) பண்டைய இந்தியாவின் வாணிகம்

இ) ஒளிரும் இந்தியா ஈ) இன்றைய இந்தியாவின் சமூகம்

iv) அம்பேத்கர் எழுதிய கருத்தாழமிக்க கட்டுரையின் தலைப்பு என்ன?

அ) இந்தியாவின் நீதிகள் ஆ) இந்தியாவின் வேர்கள்

இ) இந்தியாவின் மதங்கள் ஈ) இந்தியாவின் சாதிகள்

v) அம்பேத்கர் எதை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்கட்டுரை வெளியிட்டார்?

அ) சாதியை ஆ) மதத்தை இ) பொருளாதாரத்தை ஈ) வரலாற்றை

**2. பின்வரும் பத்தியைப் படித்து அதையடுத்து வரும் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** **5 x 1= 5**

நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதைவிட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ளுங்கள். சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழவைக்கும். விலை உயர்ந்த உணவுதான் சரியான உணவு என்று எண்ணாதீர்கள். எளிமையாகக் கிடைக்கக்கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். கணினித்திரையிலும், கைபேசியிலும் விளையாடுவதைத் தவிர்த்து நாள்தோறும் ஓடியாடிவிளையாடுங்கள். இரவுத்தூக்கம் மிகவும் இன்றியமையாதது. உரிய நேரத்தில் உறங்கச் செல்லுங்கள்; அதிகாலையில் விழித்தெழுங்கள். உங்களை எந்த நோயும் அண்டாது.

**வினாக்கள்:**

i) எந்த வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்?

ii) எந்த மூன்று நலமாக வாழ வைக்கும்?

iii) எந்த உணவு சரியான உணவு என்று எண்ணக்கூடாது?

iv) எவற்றில் விளையாடுவதை தவிர்க்க வேண்டும்?

v) எந்த நேரத்தில் விழித்தெழ வேண்டும்?

**SECTION - B**

**பகுதி – ஆ (இலக்கணம் 12 மதிப்பெண்கள்)**

**3. சான்று தருக.** **3 x 1= 3**

i) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்

அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ

ii) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

அ) வினாத்தொடர் ஆ) செய்தித் தொடர்

இ) உணர்ச்சித் தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

iii) நிலை மொழியும் வருமொழியும் இணையும் போது ஓர் எழுத்து மறைவது

அ) திரிதல் விகாரம் ஆ) தோன்றல் விகாரம்

இ) கெடுதல் விகாரம் ஈ) விகாரப் புணர்ச்சி

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **3 x 1= 3**

i) உவகை, அழுகை, அவலம், அச்சம், வியப்பு முதலான உணர்ச்சிகளை உணர்த்தும் தொடர் ............................................ எனப்படும்.

அ) வினைமுற்றுத் தொடர் ஆ) செய்தித் தொடர்

இ) உணர்ச்சித் தொடர் ஈ) வினாத்தொடர்

ii) ஆய்த எழுத்து ............................................இடமாகக் கொண்டு பிறக்கிறது.

அ) கழுத்தை ஆ) மூக்கை

இ) மார்பை ஈ) தலையை

iii) நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் .................................... பிறக்கிறது.

அ) ணகரம் ஆ) னகரம்

இ) நகரம் ஈ) லகரம்

**5. இலக்கணக்குறிப்புத் தருக. 3 x 1=3**

i) வாழ்க

அ) வினைமுற்று ஆ) ஏவல் வினைமுற்று

இ) குறிப்பு வினைமுற்று ஈ) வியங்கோள் வினைமுற்று

ii) தாய்மொழி

அ) விகாரப் புணர்ச்சி ஆ) இயல்பு புணர்ச்சி

இ) திரிதல் விகாரம் ஈ) கெடுதல் விகாரம்

iii) கடைத்தெரு

அ) கெடுதல் விகாரம் ஆ) திரிதல் விகாரம்

இ) இயல்பு புணர்ச்சி ஈ) தோன்றல் விகாரம்

**6. கூறியவாறு செய்க. 3 x 1= 3**

i) சிங்கம் வருகிறது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.

அ) சிங்கம் வருகிறார். ஆ) ஆகா! சிங்கம் வருகிறது!

இ) சிங்கம் இதோ வருகிறது. ஈ) வருகிறார் சிங்கம்.

ii) நேற்று நம் ஊரில் மழை பெய்தது - வினாத்தொடராக மாற்றுக.

அ) நேற்று ஊரில் மழை பெய்தது. ஆ) மழை பெய்தது

இ) நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?  ஈ) நேற்று ஊரில் மழை பெய்யும்

iii) அதிகாலையில் துயில் எழுவது நல்லது - விழைவுத் தொடராக மாற்றுக.

அ) அதிகாலையில் எழு.  ஆ) அதிகாலையில் துயில்.

இ) அதிகாலையில் துயில் எழு.  ஈ) துயில் எழு.

**SECTION - C**

**பகுதி – இ (இலக்கியம் 31 மதிப்பெண்கள்)**

**7. கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சீரினை நிரப்புக.  3 x 1= 3**

i) தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்

.........................................ஆகும் இறைக்கு.

அ) என்முயற்சி  ஆ) என்னுயிரும்  இ) என்அறிவு  ஈ) என்குற்றம்

ii) கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்

நாவாயும் ஓடா........................................

அ) குற்றம்  ஆ) நிறைவும்  இ) நிலத்து  ஈ) வந்து

iii) உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்

.........................................கல்லா தவர்.

அ) களர்அனையர்  ஆ) பிறர்குற்றம்  இ) ஓடும்  ஈ) உடையது

**8. கீழ்க்காணும் பாடலைப் படித்து அதையடுத்து வரும் வினாக்களுக்கு விடையளி.  5 x 1 = 5**

ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்பெனப்படுவது தன் கிளை செறாமை

**வினாக்கள்:**

i) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) கலித்தொகை  ஆ) நாச்சியார் திருமொழி

இ) புறநானூறு  ஈ) திருவிளையாடற் புராணம்

ii) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) ஆண்டாள் ஆ) நல்லந்துவனார்

இ) குடபுலவியனார் ஈ) நாகூர்ரூமி

iii) செறாமை என்பதன் பொருள்

அ) பொறுமை ஆ) பெருமை இ) சிறுமை ஈ) வெறுக்காமை

iv) இந்த பாடல் வரிகள் எந்தப் பா வகையால் பாடப்பட்டுள்ளது?

அ) கலிப்பா ஆ) வெண்பா

இ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா

v) பாடறிந்து - பிரித்து எழுதுக.

அ) பாடு + அறிந்து ஆ) பா + அறிந்து

இ) பாட + அறிந்து ஈ) பாட + றிந்து

**9. ஏதேனும் 5 செய்யுள் வினாக்களுக்கு விடை எழுதுக. 5 x 2 = 10**

i) இரட்டுற மொழிதல் அணி என்றால் என்ன?

ii) சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

iii) ஏட்டில் எழுதிய பழங்கதையாக முடிந்தவை எவை?

iv) ஆலங்குடி சோமு – குறிப்பு வரைக.

v) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?

vi) அ) யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது? ஆ) பகைவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?

**10. ஏதேனும் 4 உரைநடை வினாக்களுக்கு விடை எழுதுக. 4 x 3 = 12**

i) எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

ii) நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?

iii) அறிவியல் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?

iv) தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

v) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

## SECTION - D

## பகுதி - ஈ (துணைப்பாடம் 10 மதிப்பெண்கள்)

**11. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.**
**1 x 10 = 10**

i) சொற்பூங்கா
ii) வெட்டுக்கிளியும் சருகுமானும்
iii) ஆன்ற குடிப்பிறத்தல்

**பகுதி - உ (படைப்பாற்றல் 17 மதிப்பெண்கள்)**

**12. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1 x 4 = 4**



**13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக. 1 x 8 = 8**

i) உங்கள் பகுதியில் சாலை வசதி வேண்டி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ii) உனது பள்ளியின் விளையாட்டு விழா பற்றி நண்பனுக்கு கடிதம் எழுதுக.

**(இரு கடிதங்களிலும் உன் முகவரி விஜய் / விஜயா, 15 ராஜ வீதி, கோவை – 641001 எனக் கொள்க)**

**14. பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு கட்டுரை எழுதுக. 1 x 6 = 6**

i) முன்னுரை - சுவர் இருந்தால் தான் சித்திரம் - உடற்பயிற்சியின் நன்மைகள் - யோகாவின் பங்கு - தவறான உணவு முறை - முடிவுரை

**(அல்லது)**

ii) முன்னுரை - நூலகத்தின் வகைகள்- நூலகத்தின் பயன்கள்- நூலகத்தில் பின்பற்ற வேண்டிய விதிகள்- நவீன கால நூலகங்கள்- முடிவுரை

*******************************